மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆண்டு ஒன்றுக்கு 35,000 டயர்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. தற்பொழுது, சென்னையிலும், நாகர்கோயிலும் 28,612 டயர்கள் புதுபிப்க்கப்படுகின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், வெகுதூரம் போகும் பஸ்களிலே கூட ஸ்பேர் டயர் வைக்கப்படுவதில்லை என்பது உண்மையா? அதற்கான காரணம் என்ன? இபிமேலாவது ஸ்பேர் டயர்களை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பில்லாத காரணத்தால் பதில் சொல்ல இயலவில்லை.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, ஒரு புதிய டயர் எவ்வளவு மைல் ஓட வேண்டுமென்று கணக்கிடப்படுகிறதா? அவ்வாறு ஓட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : புதிய டயர் பற்றிய விவரம் இல்லை. ஆனல் புதுப்பித்த டயரை 12,000 மைல்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

ஆத்தூர்-காயல்பட்டினம் சாலே

* 425 வின.—திரு. எம். அப்துல் கபூர் சாகிப் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்கா, ஆத்தூர் முக்காணி பாலத்திலிருந்து பெருஞ்சாலையை புன்னக்காயல் கிராமத்துக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், மேற்படி கிராமத்தில் இருந்து சுமார் ¾ (முக்கால்) மைல்தொலேவில் உள்ள காயல்பட்டினம் மேஜர் பஞ்சாயத்து பெருஞ்சாலை யுடன் கடலோரமாக மேலும் விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முக்காணி பாலத்திற்கும் புன்னக்காயல் கிராமத்திற்கும் இடையே எற்கெனவே ஒரு சாலை உள்ளது.

(இ) இல்லை.

Irrigation Projects in Hosur taluk

* 426 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal to take up the following irrigation project in Hosur taluk :

(1) Doddahalla Project near Anchetty;

(2) Byragondapally Project near Thally ; and

(3) Kodiyalam Project near Bagalur; and

(b) if so, when they will be taken up?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். இத் திட்டங்கள் பரிசிலனையில் உள்ளன.